# சிறுமியை கர்ப்பமாக்கிய ரவுடியின் தம்பி கைது

**திருபுவனை, அக். 2–**

திருபுவனை அருகே ஆசை வார்த்தை கூறி சிறுமியை கர்ப்பமாக்கிய ரவுடியின் தம்பியை போக்சோ வழக்கில் போலீசார் கைது செய்தனர்.

புதுச்சேரி மாநிலம் , திருபுவனை அடுத்த சன்னியாசிகுப்பத்தை சேர்ந்தவர் ரத்தினவேலு மகன் ஆகாஷ்,24; இவர் அதே பகுதியில் உள்ள தனியார் கம்பெனியில் ஒப்பந்த ஊழியராக வேலை செய்து வந்துள்ளார். இந்நிலையில் அவருக்கு 16 வயது சிறுமியிடம் பழக்கம் ஏற்பட்டுள்ளது. நாளடைவில் திருமணம் செய்து கொள்வதாக ஆசை வார்த்தை கூறி சிறுமியிடம் நெருங்கி பழகி வந்துள்ளார்.

இதற்கிடையே உடல் நிலை பாதிக்கப்பட்ட நிலையில் அந்த சிறுமி புதுச்சேரி மகளிர் மற்றும் குழந்தைகள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். மருத்துவர்கள் மேற்கொண்ட பரிசோதனையில் சிறுமி கர்ப்பமாக இருப்பது தெரியவந்தது.

இது குறித்து மருத்துவமனை நிர்வாகம் கொடுத்த புகாரின் பேரில் திருபுவனை போலீசார் போக்சோ சட்டத்தின் கீழ் வழக்குப் பதிந்து ஆகாஷை கைது செய்து புதுச்சேரி கோர்ட்டில் ஆஜர்படுத்தி காலாப்பட்டு மத்திய சிறையில் அடைத்தனர்.

**ரவுடியின் தம்பி:** கைது செய்யப்பட்ட ஆகாஷ் கடந்த 2022 ஆம் ஆண்டு ஜூலை 19ம் தேதி தன்னை காதலிக்க மறுத்த கல்லூரி மாணவியை சன்னியாசிகுப்பம் பஸ் நிறுத்தத்தில் கொடூரமாக வெட்டி கொலை செய்த வழக்கில் கைது செய்யப்பட்ட ரவுடி முகேஷின் தம்பி என்பது குறிப்பிடத்தக்கது.


## பொது அறிவிப்பு

புதுச்சேரி மாநிலம், புதுச்சேரி நகராட்சி, நெல்லித்தோப்பு, விவேகானந்தா நகர், நான்காவது குறுக்கு தெரு, நெ.14–ம் வீட்டில் வசிக்கும் திரு.ரமேஷ் அவர்களின் மனைவி திருமதி.கவிதா ஆகிய எனது கட்சிக்காரர் சொன்னதன் பேரில் கொடுக்கும் பொது அறிவிப்பு என்னவென்றால்;

புதுச்சேரி மாநிலம், முதலியார்பேட்டை கொம்யூன், உழந்தை வருவாய் கிராமம், பாரீஸ் கார்டனில், வார்டு–K, பிளாக் நெ.1, டவுன் சர்வே நெ.13/4, ரீ.சர்வே நெ.13பிடி, கதாஸ்தர் நெ.19பி, பட்டா நெ.898–ல் அடங்கிய மனை எண்.56 இதன் விஸ்தீரணம் 1200 சதுர அடி அளவுள்ள காலி மனையின் பத்திரமானது எனது கட்சிக்காரர் பெயரில், புதுச்சேரி மாவட்ட பதிவகத்தில் கடந்த 30.03.2012–ல் ஆவண எண்.3189/2012–ஆக பதியப்பட்ட கிரயப் பத்திரத்தை எனது கட்சிக்காரர், கடந்த 06.07.2026 அன்று மாலை சுமார் 7.00 மணியளவில் சின்னகடை அருகே காந்தி வீதியில் உள்ள ஜெராக்ஸ் கடையில் நகல் எடுத்து விட்டு வீட்டிற்கு செல்லும்போது தனது பையில் வைத்திருந்த மேற்படி அசல் பத்திரத்தை தவறவிட்டுவிட்டார். மேலும் தேடிப்பார்த்தார் இதுவரை கிடைக்கவில்லை. மேற்படி பத்திரத்தை கண்டெடுத்தவர்கள் தயவு செய்து மேற்படி எனது கட்சிக்காரரிடமோ அல்லது கீழ்கண்ட என்னுடைய முகவரிக்கோ ஒப்படைக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**PONNUSAMY@SURESHKUMAR,** Advocate, No.85, Thillai Mastry Street, Puducherry-1.


# தட்டாஞ்சாவடி தொகுதியை முன்மாதிரியாக மாற்றுவேன்

## தி.மு.க.,வேட்பாளர் சேதுசெல்வம் உறுதி



■ தட்டாஞ்சாவடி இடைத்தேர்தல் தி.மு.க., வேட்பாளர் சேதுசெல்வத்தை ஆதரித்து புதுச்சேரி பொறுப்பாளர் ஜெகத்ரட்சகன் எம்.பி., மாநில அமைப்பாளர் சிவா ஆகியோர் வினோபா நகர் பகுதியில் ஓட்டு சேகரித்தனர்.

**புதுச்சேரி, அக். 2–**

தட்டாஞ்சாவடி தொகுதியை முன்மாதிரி தொகுதியாக மாற்றிக் காட்டுவேன் என தி.மு.க., வேட்பாளர் சேது செல்வம் கூறி ஓட்டு சேகரித்தார்.

தட்டாஞ்சாவடி இடைத்தேர்தல் தி.மு.க., வேட்பாளர் சேதுசெல்வத்தை ஆதரித்து புதுச்சேரி பொறுப்பாளர் ஜெகத்ரட்சகன் எம்.பி., மாநில அமைப்பாளர் சிவா ஆகியோர் தினமும் தீவிர பிரசாரம் மேற்கொண்டு வருகின்றனர்.

நேற்று வினோபா நகர், விநாயக முருகன் நகர், லட்சுமிநகர் ஆகியோர் பகுதிகளில் தி.மு.க., நிர்வாகிகள், கூட்டணி கட்சியினருடன் சென்று ஓட்டு சேகரித்தனர்.

அப்போது, தி.மு.க., வேட்பாளர் சேதுசெல்வம் பேசியதாவது: தட்டாஞ்சாவடி முதல்வரின் செல்ல தொகுதி என்கின்றனர். ஆனால் 20 ஆண்டுகள் இத்தொகுதி பின்னோக்கி சென்றுவிட்டது. எந்த அடிப்படை வசதியும் இல்லை.

ரோடுகள் அனைத்தும் குண்டு குழியுமாக இருக்கின்றது. படித்த இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு இல்லை.

ஏழைகளுக்கு வீட்டு மனைகள் கூட வழங்கப்படவில்லை. அடிக்கடி மின் தடை ஏற்பட்டு தொகுதி முழுதும் இருளில் மூழ்கிவிடுகின்றது.

முதல்வர் தொகுதியே இப்படி என்றால் மற்ற தொகுதிகளை பற்றி சொல்ல வேண்டியதில்லை. தி.மு.க., இத்தொகுதியில் வெற்றிப்பெற்றதும், படித்த தொகுதி இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு உருவாக்கி தரப்படும்.

பின்னோக்கி செல்லும் தட்டாஞ்சாவடி தொகுதியை வளர்ச்சி பாதைக்கு கொண்டு செல்வேன். தட்டாஞ்சாவடி தொகுதியை முன் மாதிரி தொகுதியாக மாற்றிக் காட்டுவேன்.

தொகுதி முழுவதும் சுத்திகரிப்பு நிலையம் அமைத்து பாதுகாப்பான குடிநீரை மக்களுக்கு வழங்க ஏற்பாடு செய்வேன். தொகுதி முழுவதும் தடையற்ற மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுப்பேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

# வழக்குகளுக்கு பயப்பட மாட்டேன்

## நேரு எம்.எல்.ஏ., பளீச்

**புதுச்சேரி, அக். 2–**

நேரு எம்.எல்.ஏ., நேற்று அளித்த பேட்டி:

எனது தொகுதிக்குட்பட்ட பெரிய மார்க்கெட்டில் வியாபாரம் செய்த பெண்ணிற்கு நடந்த கொடுமையை அரசு கண்டுகொள்ளவில்லை. இதுகுறித்து முதல்வர் மற்றும் சபாநாயகரிடம் மனு கொடுக்க சட்டசபை சென்றோம். பிரச்னை செய்ய செல்லவில்லை. மனு கொடுத்து விட்டு, அம்பேத்கர் சிலை அருகில் ஆர்ப்பாட்டம் நடத்த இருந்தோம்.

அப்போது வந்த அமைச்சர் மல்லாடி கிருஷ்ணா ராவிடம் பேச முயன்றபோது அவர் தவிர்த்தார். அமைச்சரவை என்பது கூட்டு பொறுப்பு. அவர் அலட்சியப்படுத்தியதால், மக்கள் கேள்வி கேட்டனர். மல்லாடி கிருஷ்ணாராவிடம் மனு அளிக்க சென்றேன். அப்போது அவரிடம் நீங்கள் செய்தது தவறு என வாக்குவாதம் நடந்தது.



நேரு

போராட்டம் நடத்தினால், நீங்கள் பதவியில் நீடிக்க முடியாது என கூறினேன். மீனவர்களுக்காக நான்நிறைய இடத்தில்குரல் கொடுத்துள்ளேன். அவர்களுக்கு கல்வி வேலை வாய்ப்பில், 5 சதவீத இடஒதுக்கீடு வழங்க வேண்டும். நியமன எம்.எல்.ஏ.,க்களில் ஒருவரை மீனவ சமுதாயத்தில் இருந்த தேர்ந்தெடுக்க வேண்டும் என கோரிக்கை விடுத்திருக்கிறேன்.

என் மீது போலீசில் பொய் புகார் கொடுக்கப்பட்டுள்ளது. வழக்குகளுக்கு பயப்படும் ஆள் நான் கிடையாது.

இவ்வாறு அவர் கூறினார்.





இன்று (02.10.2026) பிறந்தநாள் விழா காணும் நண்பர்
புதுச்சேரி காவல் கட்டுப்பாட்டு அறை ஒயர்லஸ் பிரிவில்
கடந்த 36 ஆண்டுகளாக பணியாற்றி வரும்

**மு. அருள்மொழி அரசு**
Subinspector of Police cum Wireless Operator, Grade-I. அவர்களுக்கு

**பிறந்த நாள் நல்வாழ்த்துக்கள்...**

தமிழ்த்தாயின் அருளாளே தழைத்துநின்று
தரணியெல்லாம் ஒலிஅலையாய் உலாவந்து
உமிழ்கின்ற சொல்லுக்கும் வலிமையுண்டு
உன்எண்ணம்போல் வாழ்க்கையை வகுத்துகொண்டு
மகிழ்கின்ற வாழ்விற்கு பொருள்வேண்டும்
மகாத்மாவின் உண்மைக்கு உயிர்(ல்) உண்டு
நெகிழ்கின்ற மனத்தாலே உருகிநின்று
நிலவொளியாய் ஆண்டவரின் அருள்பெற்றீர்...
அமிழ்தினிலும் மேலான அன்பைபெற்று
அருள்மொழியின் குரலோசையாலே ஒன்றிணைந்தோம்...

வாழ்த்தும் அன்பு நெஞ்சங்கள்...



| V.GANESAN | M.GANASEKAR | Srinuvasan | K.Mahesh | Govindan | Vijaya Ganapathi |
|---|---|---|---|---|---|
| GENERAL SECRETARY OF KAVALAR POTHUNALA IYAKKAM | High court of Madras | Supreme court of India, New Delhi | Deputy Registrar, Puducherry University | N.R. Congress Delarshpet | Delarshpet |


# இதய நோய் விழிப்புணர்வு சிறப்பு மருத்துவ முகாம்



■ புதுச்சேரி இருதய ஷேத்ரா ஹார்ட் கிளினிக்கில் இருதய சிறப்பு மருத்துவர் அனுஷ்ராஜ் தலைமையில் இதய நோய் விழிப்புணர்வு சிறப்பு மருத்துவ முகாம் நடந்தது.

**புதுச்சேரி, அக். 2–**

புதுச்சேரி இருதய ஷேத்ரா ஹார்ட் கிளினிக்கில் இதய நோய் விழிப்புணர்வு சிறப்பு மருத்துவ முகாம் நடந்தது.

புதுச்சேரி இந்திராகாந்தி சிக்னல் அருகில் இருதய ஷேத்ரா ஹார்ட் கிளினிக் இயங்கி வருகிறது.

இங்கு உலக இதய தினத்தை முன்னிட்டு, புதுச்சேரி பொதுமக்களுக்கு இதய நோய்கள் குறித்த விழிப்புணர்வு சிறப்பு மருத்துவ முகாம் நடந்தது.

முகாமில், இருதய சிறப்பு மருத்துவர் அனுஷ்ராஜ் தலைமையில் நடைபெற்ற இம்முகாமில், பொதுமக்களுக்கு இதய ஆரோக்கியம் தொடர்பான ஆலோசனைகள் மற்றும் பரிசோதனைகள் வழங்கப்பட்டது. முகாமில் கலந்து கொண்ட பொதுமக்களுக்கு, இ.சி.ஜி., எக்கோ, உள்ளிட்ட இதயம் தொடர்பான அத்தியாவசிய ரத்த பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டது.

இதய நோய்களின் ஆரம்ப அறிகுறிகள், ஆபத்து காரணிகள், தடுப்பு முறைகள் மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கைமுறை குறித்து பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

முகாமில் டாக்டர் அனுஷ்ராஜ் இதய நோய்களை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து, உரிய மருத்துவ ஆலோசனையை பெறுவதன் முக்கியத்துவம் குறித்து பொதுமக்களுக்கு விளக்கினார்.

தொடர்ந்து பொதுமக்களுக்கு இதய ஆரோக்கியம் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

# உழவர்கரை கோவிலில் சத்ருசம்ஹார மூல மந்திர மஹா யாகம்

**புதுச்சேரி, அக். 2–**

உழவர்கரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோவிலில் உள்ள வள்ளி தெய்வானை சமேத சுப்பிரமணிய சுவாமிக்கு புரட்டாசி மாதம் தேய்பிறை சஷ்டியை முன்னிட்டு இன்று மாலை 5.00 மணிக்கு சத்ருசம்ஹார மூல மந்திர மஹா யாகம் நடக்கிறது.

இதையொட்டி, காலை 7:00 மணிக்கு சுப்பிரமணியர் மூல மந்திர மஹாயாகமும், 9:00 மணிக்கு சுப்பரமணிய சுவாமிக்கு சிறப்பு அபிஷேகம் நடக்கிறது. மாலை 5.00 மணிக்கு பூர்ணாஹூதி கலசாபிஷேகம்,

சத்ருசம்ஹார திரிசதி அர்ச்சனை,வாஸ்து பூஜை, பிரவேச பலி, ரக்ஷோக்னம்,தீபாரதனை தொடர்ந்து, அருட் பிரசாதம் வழங்கப்படுகிறது.

ஏற்பாடுகளை திருக்காஞ்சி கெங்கவராக நதீஸ்வரர் தேவஸ்தானம் தலைமை அர்ச்சகர் சரவண சிவாச்சாரியார், கார்த்திகேய சிவாச்சாரியார் ஆகியோர் செய்து வருகின்றனர்.


Shree Vasavi
**Kinder Nest**
Playschool & Daycare
Small Steps . Big Dreams
A safe, loving nest for your child's grandest dreams

**GRAND OPENING**

Date: 02.10.2026 | Day: Friday | Time: 2.00 pm
No.88, Needarajappa Iyer Street, Pondicherry-1, Cell: 8667761211, 9092033336



Chief Guest
Thiru N.Rangasamy
Honourable Chief Minister of Puducherry

Guest of Honor
Thiru G.Nehru @ Couppoussamy
Honourable Member of Legislative Assembly, Puducherry
Thiru Vignesh Kannan
Honourable Member of Legislative Assembly, Puducherry
Thiru S. Nadarajan
Correspondent, PTI

You are cordially invited to grace this auspicious occasion with your esteemed presence and blessings, and thereby contribute to the grand success of the program

Founders & Directors
(Shree Vasavi Kinder Nest)
| Chandrakala Srinivasan | Chitra Ramesh |
| Preethi Radhakrishnan | Soundarya Praveenkumar |
| Ouchanrany Vengadessin |

Wishing the function a grand success

Radhakrishnan V
Vasavi Clinical Lab & ECG
No.154, MG Road, Muthialpet, Puducherry-3, Cell: 9894883892.

Praveen Kumar P
Certified Financial & Block chain Consultant
No.21, 9th Cross, West ext. Rainbow Nagar, Puducherry-11. Cell: 9345099900.

Nivas Auto Spares
No.125, S.V. Patel Salai, Puducherry-1.
Cell: 9994672653

Authorised distributor
EUROGRIP
THE BIKE TYRE SPECIALIST



RKN GRAND HOTEL

**தோசை திருவிழா**

Sunflower VEG. RESTAURANT

நாள் : 28.09.2026 முதல் 04.10.2026 வரை
நேரம் : மாலை 4.00 மணிமுதல் இரவு 10.00 மணிவரை



- வெஜ் சிக்கன் தோசை
- வெஜ் மட்டன் தோசை
- பீட்ரூட் தோசை
- பன்னீர் புர்ஜி தோசை
- காளான் செட்டிநாடு தோசை
- பனானா தோசை
- ராகி பன் தோசை
- நெய் மசாலா தோசை
- நெய் பொடி தோசை
- சீஸ் கார்ன் சில்லி தோசை
- மைசூர் மசாலா தோசை
- புதினா தோசை

12 தோசை வகைகள் மற்றும் 5 சட்னி வகைகள்
ருசித்து மகிழ வருகை தாரீர்...




Web : www.rkngrand.com
Email : reservations@rkngrand.com
Phone : +91 413 2261616, +91 73977 27023
78, அண்ணா சாலை, புதுச்சேரி-605 001.

Admission Reserved
Terms & Conditions apply



बैंक ऑफ़ बड़ौदा Bank of Baroda 119 FOUNDATION YEAR LEADING WITH TRUST

**பாண்டிச்சேரி கிளை**
நெ.58-60, ரவிகிருஷ்ணா இன், வெள்ளாழ தெரு, பாண்டிச்சேரி-605 601.
போன் : 0413-2336812, Mail ID: pondic@bankofbaroda.bank.in

(baanknet போர்ட்டலில் நடத்தப்படும் ஏலத்திற்கான செய்தித்தாள்களில் வெளியிடப்படும் சுருக்கமான விற்பனை அறிவிப்பு)

**அசையா சொத்துக்களின் விற்பனைக்கான மின் ஏல விற்பனை அறிவிப்பு**

**பிற்சேர்க்கை IV-Aயின்படி ( விதி 6(2) மற்றும் 8(6)யை பார்க்கவும்)**
**2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்கள் அமலாக்கச்சட்டம் விதிகளின் கீழ் 6(2) மற்றும் 8(6) இன் கீழ் வைக்கப்பட்டுள்ள அசையாச் சொத்துக்களை மின் ஏலம் மூலம் விற்பனை செய்தல் அறிவிப்பு.**

கடன்தாரர் / ஜாமீன்தாரர் / அடமானதாரர் ஆகியோருக்கு குறிப்பாகவும் பொதுமக்களுக்கு பொதுவாகவும் இந்த அறிவிப்பின் மூலம் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிட்டுள்ள சொத்துக்களை **பாங்க் ஆஃப் பரோடா வங்கி**யின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்களால் சுவாதீனம் செய்யப்பட்ட கீழே உள்ள சொத்துக்கள் **''எங்கு உள்ளதோ அப்படியே'' ''எப்படி உள்ளதோ அப்படியே'' மற்றும் '' என்ன இருக்கிறதோ அதே நிலையில்''** என்ற அடிப்படையில் வங்கியில் பெறப்பட்ட கடனுக்காக கீழே குறிப்பிட்டுள்ள கடன் மற்றும் செலவுகளை திரும்பப் பெறும் நோக்கத்துடன் மின் ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட உள்ளது. கடன்தாரர் / ஜாமீன்தாரர் / அடமானதாரர் விபரம், நிலுவைத் தொகை விபரம், சொத்து விபரம் குறைந்தபட்ச கேட்பு விலை, மின்னனு ஏலத் தேதி மற்றும் நேரம், டேவணித் தொகை மற்றும் ஏல அதிகரிப்பு தொகை ஆகியவை கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

**M/s. I Wood Carving, ரீசர்வே நெ. 182/5, கிழக்கு கடற்கறை சாலை, லாஸ்பேட்டை, பாண்டிச்சேரி - 605 008. மற்றும் Mr.Gnanabouchane Roberts S/o. Jimmy Ebenezer, No. 16, La de Loristhan Street, Pondicherry-605001. & ஜாமீன்தாரர்: Mrs. Radjeswary W/o Mr. Gnanabouchane Roberts, No. 16, La de Loristhan Street, Pondicherry-605001.**

A/c.No.**05640600062337, நிலுவை தொகை ரூ.8,53,015.38/- மேலும் 30.09.2026 அன்று முதல் வட்டி மற்றும் இதர கட்டணங்கள்.**
A/c.No.**05640400044040, நிலுவை தொகை ரூ.26,29,220.63/- மேலும் 30.09.2026 அன்று முதல் வட்டி மற்றும் இதர கட்டணங்கள்.**
A/c.No.**05640600059848, நிலுவை தொகை ரூ.4,82,050.96/- மேலும் 30.09.2026 அன்று முதல் வட்டி மற்றும் இதர கட்டணங்கள்.**
A/c.No.**05640600061431, நிலுவை தொகை ரூ.17,31,337.87/- மேலும் 30.09.2026 அன்று முதல் வட்டி மற்றும் இதர கட்டணங்கள்.**
**30.09.2026 அன்று மொத்த நிலுவை தொகை ரூ.56,95,624.84/-**

**அசையாச் சொத்தின் சுருக்கமான விவரங்கள் மற்றும் ஏதேனும் வில்லங்கங்கள் இருப்பின்**
பாண்டிச்சேரி பதிவு மாவட்டம், பாண்டிச்சேரி சார்பதிவு மாவட்டம், அரியாங்குப்பம் கொம்யூன் பஞ்சாயத்து, கிராம நெ. 69, தவளக்குப்பம் வருவாய் கிராமத்தில் ரீசர்வே நெ. 2/5, கதாஸ்தர் எண்கள். 82, 81/1/2, 81/2/2, 83, 78/1/2 பகுதி, 79/1/2 பகுதி, 79/2/2 பகுதி, 80, பட்டா எண். 501, தற்பொழுது உட்பிரிவின்படி ரீசர்வே நெ. 2/5/A/1/A இதில் மனை என் 27, 2 குழி, 1¼ வீசம் அல்லது கிழக்கிலிருந்து மேற்காக 20 அடி, தெற்கில் இருந்து வடக்காக 60 அடி, இதன் மொத்தப் பரப்பளவு 1200 சதுரஅடியில் அமைந்துள்ள நிலம் மற்றும் கட்டிடம் உட்பட. **நான்கு எல்லைகள் :** மனை எண். 51க்கு வடக்கே, புதியப் பாதைக்கு தெற்கே, மனை எண் 26க்கு கிழக்கே, மனை எண் 28க்கு மேற்கே. மேற்கண்ட மனை **'ரஞ்சிதம் பொன்னுசாமி நகர்'** மனைப்பிரிவில் அமைந்துள்ளது. மற்றும் புதுச்சேரி நகர குழுமத்தால் முறைபடுத்துதல் மூலம் முறைபடுத்தப்பட்டுள்ளது. ஆணை எண். 14664/1020244633/PPA/Z(INDIVIDUAL/PLOT)/2024 தேதி 12.12.2024. அடமானம் வைக்கப்பட்ட சொத்து திருமதி.Radjeswary W/o Mr. Gnanabouchane Roberts, அவர்கள் பெயரில் உள்ளது.
**சுவாதீன நிலை : Physical**

| நிர்ணயிக்கப்பட்ட விலை | ரூ. 23,76,000/- | டேவணித் தொகை | ரூ. 2,37,600/- | ஏல உயர்வு தொகை | ரூ. 25,000/- |
|---|---|---|---|---|---|

**மின் ஏல தேதி மற்றும் நேரம் 10.11.2026 அன்று மதியம் 2.00 மணி முதல் 6.00 மணி வரை வரம்பற்ற 10 நிமிட அவகாசத்துடன் மின் ஏலம் நடைபெறும்**
**சொத்தினை பார்வையிடும் தேதி : 20.10.2026 (நேரம் காலை 10.30 மணி முதல் மாலை 3.30 மணி வரை)**
**டேவணித் தொகை செலுத்துவதற்கான கடைசி நாள்: 10.11.2026**

விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு **https://www.bankofbaroda.bank.in/e-auction** மற்றும் **baanknet.com** என்ற இணையதள இணைப்பை பார்க்கவும்/வருகைதரவும். மேலும் ஏலதாரர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய அங்கிகரிக்கப்பட்ட அதிகாரி செல் : 9329611020 & 9515024578 தொடர்பு கொள்ளலாம்.

தேதி : 01.10.2026
இடம் : பாண்டிச்சேரி

**அதிகாரப்பூர்வ அலுவலர், முதன்மை மேலாளர் / பேங்க் ஆஃப் பரோடா**